# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0637/2016/பேரூராட்சி

ஆணை எண்: 040 /2017

நாள்: 27/03/2017

திரு. மு. வானுமாமலை
4C, ஏழாம்கரம் தெரு,
வடக்கு வள்ளியூர் (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம். - முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சிறப்பு நிலைப் பேரூராட்சி,
வடக்கு வள்ளியூர் - 627 117.
திருநெல்வேலி மாவட்டம். - எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர், 4C, ஏழாம்கரம் தெருவில், வசிக்கும் திரு. மு. வானுமாமலை அவர்களது 02.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 04.07.2016 அன்று பெறப்பட்டு, 637/2016 எண்ணிட்ட அசல் மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது–

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சியை சேர்ந்த திரு. மு. வானுமாமலை என்பவர் மேற்கூறிய முறையீட்டு மனுவில் வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சியில் தான் செய்து முடித்த 20 வகையான பணிகளுக்கு தன்னால் செலுத்தப்பட்ட

டேவணித் தொகை மற்றும் கூடுதல் மேல் வைப்புத் தொகை ரூ.5,95,661/-ஐ பணிகள் செய்து முடித்தபின்பும் தணிக்கை முடித்தபின்பும் திரும்ப வழங்காமல் பலமுறை கேட்டும் தராமல் காலம் கடத்துவதாக தெரிவித்து அத்தொகையினை திரும்ப பெற்று தருமாறு இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக முறையீட்டு மனுதாரரிடம் 03.01.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. முறையீட்டு மனுதாரர் விசாரணையின் போது தமது வாக்குமூலத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"நான் கடந்த 9 ஆண்டு காலமாக வள்ளியூர் பேரூராட்சியில் ஒப்பந்தகாரராக பணிபுரிகிறேன். மொத்தம் 15 பேர்கள் உள்ளனர். அதில் நானும் ஒருவர். 2011ம் ஆண்டிலிருந்து நான் பேரூராட்சியில் வேலை செய்தவகையில் எனக்கு வைப்புத் தொகையாக ரூ.5,95,661/- பேரூராட்சியில் இருந்து வரவேண்டியுள்ளது. பல தடவை நேரில் பல செயல் அலுவலரை பார்த்தேன். எனக்கு 2012-ஆம் ஆண்டு தான் பணம் கொடுத்தார்கள். இதுவரை எந்த பணமும் கொடுக்கவில்லை. எனவே எனக்கு வரவேண்டிய பணத்தை பெற்றுத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்மந்தமாக வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் 04/01/2017 தேதியில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது செயல் அலுவலர் கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"நான் கடந்த ஜுன் மாதம் 2016 ஆண்டு பத்தமடை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்தேன். 2016 செப்டம்பர் மாதம் முதல் வள்ளியூர் பேரூராட்சி கூடுதல் பொறுப்பில் உள்ளேன். மனுதாரர் திரு. வானுமாமலையுடைய முறையீட்டு மனு பற்றி எனக்கு தெரியும். மனுவில் உள்ள நிலுவை இனங்களில் வரிசை எண்.1, வரிசை எண்.2, இனம் 3, இனம் 4, இனம் 5, இனம் 6, இனம் 7, இனம் 8, இனம் 14, ஆகிய தொகை முழுவதுமாகவும், பகுதியாகவும் வழங்கப்பட்டு உள்ளது. இனம் 17 உள்ளாட்சி நிதி தணிக்கை ஆட்சேபணை தணிக்கை குறிப்பு உள்ளன. 2012–13 ஆம் ஆண்டு தணிக்கை குறிப்பிற்கு ரூபாய் 37,580/- ரூபாய் கூடுதலாக தணிக்கை குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. இந்த தணிக்கை குறிப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது எனக்கு தெரியாது. நான் அப்பொழுது பணியில் இல்லை. தணிக்கை தடை இருந்ததால் ரூபாய் 47,500/- இன்னும் விடுவிக்கப்படாமல் உள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து இனங்கள் குறித்தும் முழுவதும் பரிசீலனை செய்து முழு

விவரங்களை அதற்குரிய ஆதாரங்களையும் சமர்ப்பிக்கிறேன் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை முடிந்தவுடன் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை ஒரு மாதத்திற்குள் ஆய்வறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அனுப்பி வைப்பார்கள்.அதன்மீது பதில் அறிக்கையை சம்பந்தப்பட்ட நிதி தணிக்கை ஆய்வகளை 2 மாதத்திற்குள் உரிய விளக்க குறிப்புகள் அல்லது பதில் அறிக்கையை சமர்ப்பிக்கிறேன். மனுதாரரால் கோரப்பட்ட வைப்பு தொகை அனைத்து வரிசை எண்களுக்கு தனித்தனியாக விரிவான விவரங்கள் ஒரு வாரத்தில் சமர்ப்பிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்." என்று தெரிவித்தார்.

4. செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தபடி 11.01.2017 நாளிட்ட கடிதம் மூலம் தமது அறிக்கையை சமர்ப்பித்துள்ளார். செயல் அலுவலரின் அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

"புகார் மனுதாரர் திரு. மு. வானுமாமலை என்பவரால் இப்பேரூராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளுக்கு பிடித்தம் செய்து இப்பேரூராட்சி நிதியின் இருப்பில் வைக்கப்பட்ட கூடுதல் வைப்புத் தொகையினை திரும்ப வழங்க 08.06.2016ல் கோரிக்கை வைக்கப்பட்டது. அக்கோரிக்கையினை பரிசீலனை செய்ததில் அன்னாரால் முழுமையான விபரங்கள் ஏதும் அளிக்கப்படாமல் பிடித்தம் செய்யப்படாத தொகையினையும் குறிப்பிடப்பட்டு இருந்தது கண்டறியப்பட்டது. அக்கோரிக்கையின்படி அன்னாரால் மொத்தமாக வேண்டப்பட்ட தொகை ரூ.5,95,661/- ஆகும். அன்னாரால் வேண்டப்பட்ட பட்டியல்படியான தொகைகளில் பல தொகைகள் ஏற்கனவே அன்னாரால் திரும்ப பெறப்பட்டுவிட்டது. அதற்கான ஆதாரமாக அன்னாரால் வழங்கப்பட்ட ஒப்புதல் நகல் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது. (இவ்வலுவலக கொடுப்பாணை எண்.193, நாள்:14.05.2013 தொகை ரூ.3,58,300/-)

எனினும் அன்னாருக்கு தொகை வழங்கும் விதமாக இவ்வலுவலக ஆவணங்கள் மற்றும் வைப்புத் தொகை பதிவேடுகளுடன் ஒப்புநோக்கப்பட்டது. மேலும், முறைமன்றத்தில் அறிவுறுத்தப்பட்டவாறு மேற்படி மனுதாரரால் அளிக்கப்பட்ட மனு மீது விரிவான விளக்கங்கள் உரிய ஆதாரங்களுடன் கீழ்க்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>கோரிக்கை வரிசை எண்.1-18.04.2011 – Special Road ரூ.35,000/-</u>**

சிறப்பு சாலை திட்டம் 2010-11-ன்படி 2-வது வார்டு குமாரபுதுக்குடியிருப்பு பகுதியில் தார்சாலை அமைத்தல் வேலைக்கு 18.04.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.70,000/-

இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்:14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு. மு. வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டு விட்டது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.2-02.05.2011-Special Road – ரூ.3,750/-**

சிறப்பு சாலை திட்டம் 2010-11-ன்படி 2-வது வார்டு குமாரபுதுக்குடியிருப்பு பகுதியில் தார்சாலை அமைத்தல் வேலைக்கு 02.05.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.7,500/-ல் ரூ.3,750/-ம் இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்.14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டும் மேற்படி தொகையில் ரூ.3,750/- அன்னார் பெயரில் இவ்வலுவலக வைப்புத் தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.3-13.06.2011 – Special Road - ரூ.33,250/-**

சிறப்பு சாலை திட்டம் 2010-11ன்படி 6-வது வார்டு காமராஜ் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் வேலைக்கு 13.06.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.66,500/- இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்:14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டு விட்டது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.4 – 27.06.2011 – Special Road - ரூ.38,750/-**

சிறப்பு சாலை திட்டம் 2010-11ன்படி 7-வது வார்டு வடலிவிளையில் தார்சாலை அமைத்தல் வேலைக்கு 27.06.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.77,500/- இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்:14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு. வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.5-19.07.2011 – Bus Stand - ரூ.3,000/-**

பொதுநிதி 2011-12ன்படி பேரூராட்சி புதிய பேருந்து நிலையம் பராமரிப்பு பணி செய்தல் வேலைக்கு 19.07.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.3000/- இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்.14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டு விட்டது என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.6-19.08.2011-Special Road -ரூ.14,500/-</u>

சிறப்பு சாலை திட்டம் 2010-11ன்படி 6-வது வார்டு காமராஜ் தெரு, சிமெண்ட் சாலை அமைத்தல் வேலைக்கு 19.08.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.29,000/-ல் ரூ.14,500/- இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்.14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு. வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டும் ரூ.14,500/- அன்னார் பெயரில் இவ்வலுவலக வைப்புத் தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.7-06.09.2011 – Special Road ரூ.17,000/-</u>

சிறப்பு சாலை திட்டம் 2010-11-ன்படி 6-வது வார்டு காமராஜ் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் வேலைக்கு 06.09.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.34,000/-ல் ரூ.17,000-ம் இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்:14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டும் ரூ.17,000/- அன்னார் பெயரில் இவ்வலுவலக வைப்புத் தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.8-16.09.2011 – Perumal Koil Street – ரூ.2,000/-</u>

பொதுநிதி திட்டம் 2011-12-ன்படி பெருமாள் கோவில் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் வேலைக்கு 16.09.2011-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.2,000/-ல் ரூ.750/- இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்:14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டும் ரூ.1,250/- அன்னார் பெயரில் இவ்வலுவலக வைப்புத் தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.9-24.11.2011-IUDM-ரூ35,000/-</u>

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகள் எதுவும் இப்பேரூராட்சி பதிவேட்டில் பதிவில் இல்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.10-24.11.2011-TURIF-ரூ.11,000/-</u>

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகள் எதுவும் இப்பேரூராட்சி பதிவேட்டில் பதிவில் இல்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.11-24.11.2011 – IUDM - ரூ.33,250/-</u>

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகள் எதுவும் இப்பேரூராட்சி பதிவேட்டில் பதிவில் இல்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.12-24.11.2011 – IUDM - ரூ.38,750/-**

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகள் எதுவும் இப்பேரூராட்சி பதிவேட்டில் பதிவில் இல்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.13 - 24.11.2011 – IUDM - ரூ.4,000/-**

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுகள் எதுவும் இப்பேரூராட்சி பதிவேட்டில் பதிவில் இல்லை என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.14 – 28.02.2012 – TURIF - ரூ.40,000/-**

டூரிப் திட்டம் 2011-12-ன்படி 9-வது வார்டு பாத்திமா சர்ச் முதல் யாதவர் நடுத்தெரு வரை மற்றும் என்.ஹெச் முதல் யாதவர் சுடுகாடு வரை தார் சாலை அமைத்தல் வேலைக்கு 28.02.2012-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.80,000/-ல் ரூ.15,000/-ல் இவ்வலுவலக வங்கி செலவு சீட்டு எண்.193 நாள்.14.05.2013-ன்படி சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவருக்கு வழங்கப்பட்டும் ரூ.65,000/- அன்னார் பெயரில் இவ்வலுவலக வைப்புத் தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.15 – 30.04.2012 – Special Road – ரூ.5,026/-**

சிறப்பு சாலை திட்டம் 2010-11-ன்படி 6-வது வார்டு காமராஜ் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் வேலைக்கு 30.04.2012-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.5,026/-ம் ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவர் பெயரில் இவ்வலுவலக டேவணித்தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.16 – 17.05.2012 – TURIF - ரூ.4,785/-**

டூரிப் திட்டம் 2011-12-ன்படி 9-வது வார்டு பாத்திமா சர்ச் முதல் யாதவர் நடுத்தெரு வரை மற்றும் என்.ஹெச் முதல் யாதவர் சுடுகாடு வரை தார் சாலை அமைத்தல் வேலைக்கு 17.05.2012-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.4785/- ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவர் பெயரில் இவ்வலுவலக டேவணித்தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**கோரிக்கை வரிசை எண்.17 – 28.06.2012 – IUDM (Eswari Hospital) - ரூ.47,600/-**

ஐயுடிஎம் திட்டம் 2011-12-ன்படி ஈஸ்வரி மருத்துவமனை அருகில் சிறுபாலம் அமைத்தல் வேலைக்கு 28.06.2012-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.47,600/-ம் ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவர் பெயரில் இவ்வலுவலக டேவணித்தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.18 – 11.11.2014 – ரூ.6,500/-</u>

பொதுநிதி திட்டம் 2014-15-ன்படி விசுவாசபுரம் - வடலிவிளை சாலை சந்திப்பிலிருந்து விசுவாசபுரம் வரை தடுப்பு சுவர் அமைத்தல் வேலைக்கு 11.11.2014-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.6500/-ம் ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவர் பெயரில் இவ்வலுவலக டேவணித்தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.19 – 16.02.2015 – Visuvasapuram Wall - ரூ.22,500/-</u>

பொதுநிதி திட்டம் 2014-15-ன்படி விசுவாசபுரம் - வடலிவிளை சாலை சந்திப்பிலிருந்து விசுவாசபுரம் வரை தடுப்பு சுவர் அமைத்தல் வேலைக்கு 16.02.2015-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.22,500/-ம் ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவர் பெயரில் இவ்வலுவலக டேவணித்தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.20 – 27.01.2016 – Visuvasapuram Wall - ரூ.10,000/-</u>

பொதுநிதி திட்டம் 2014-15-ன்படி விசுவாசபுரம் -வடலிவிளை சாலை சந்திப்பிலிருந்து விசுவாசபுரம் வரை தடுப்பு சுவர் அமைத்தல் வேலைக்கு 27.01.2016-ம் தேதி அன்று பிடித்தம் செய்யப்பட்ட டேவணித்தொகை ரூ.10,000/-ம் ஒப்பந்ததாரர் திரு.வானுமாமலை என்பவர் பெயரில் இவ்வலுவலக டேவணித்தொகை பதிவேட்டின்படி இருப்பில் உள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கூடுதல் மேல்வைப்புத் தொகை</u>

<u>கோரிக்கை வரிசை எண்.1 – பாத்திமா சர்ச்சில் யாதவர் சுடுகாடு வரை தார் சாலை அமைத்தல் பணிக்கு - ரூ.1,10,000/-</u>

கோரிக்கை வரிசை எண்.14-இல் குறிப்பிடப்பட்ட வேலை விபரம் மீண்டும் இக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோரிக்கை வரிசை எண்.2 – ஈஸ்வரி ஆஸ்பத்திரி வடக்கு பக்கம் சிமெண்டு பைப்பாலம் அமைத்தல் பணிக்கு - ரூ.80,000/-</u>

கோரிக்கை வரிசை எண்.17-இல் குறிப்பிடப்பட்ட வேலை விபரம் மீண்டும் இக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்காண் விபரங்கள் அடிப்படையில் மனுதாரரால் கோரப்பட்ட வைப்புத் தொகை சில இனங்களில் முழுமையாகவும், சில இனங்களில் பகுதியாகவும் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பகுதியாக வழங்கப்பட்டுள்ள தொகைகள் அனைத்தும் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ளதால் விதிகளின்படி பேரூராட்சி மன்ற தீர்மானம் பெற்று தணிக்கை தடைகள் ஏதும் நிலுவையில் இல்லாத நிலையில் வைப்புத் தொகைகள் மனுதாரருக்கு விரைவில் வழங்கப்பட்டுவிடும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

5. இந்நேர்வில் மனுதாரரின் கோரிக்கை குறித்து வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்பட்ட விளக்கம் மற்றும் செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பரிசீலிக்கப்பட்டது. 2013ம் ஆண்டு வழங்கப்பட்ட நிலையும் பிற ஆண்டுகளில் வைப்புத் தொகை இன்னமும் வழங்காமல் இருப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள வைப்புத் தொகையினை தாமதமின்றி வழங்கி அதன் விபரத்தினை இம்முறைமன்றத்திற்கு தெரிவிக்குமாறு வடக்குவள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரை பணிக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

7/4/2017

செயலாளர்.

பெறுநர்

திரு. M. வானுமாமலை
4C, ஏழாங்காம் தெரு,
வடக்கு வள்ளியூர் (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் பேரூராட்சி,
வடக்கு வள்ளியூர்,
திருநெல்வேலி மாவட்டம்.

7.4.17

7/4/17

நகல்
உதிரி – 5